லிருந்து பவுடர் தயார் செய்து, அதை நெசவுத் துறையில் பயன் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதி சம்பத்தில் அரசு அறிவிப் பினால் தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. தனியார் தொழில் முனைவோர் யாராவது முன் வந்து அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அனுமதி கேட்பார்களேயானால் அரசு அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அவர்களுக்குச் செய்து தரும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் எங்கு பார்த் தாலும் யூகலிப்ட்டஸ் மரங்கள் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. எனவே, அதன் மூலம் யூகலிப்ட்டஸ் ஆயில் அல்லது பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையை புதுக்கோட்டையில் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு உறுப்பினர் அதற்காகத் தனி வினா எழுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(10-05)

சேடப்பட்டி தொகுதியில் தொழிற்பேட்டை.

* 2076. **திரு. ஆ. அதியமான் :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதியில், எழுமலை யிலோ, பேரையூரிலோ, கல்லுப்பட்டியிலோ அரசு தொழிற் பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

(10 05)

திரு. ஆ. அதியமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, என்னுடைய சேடப்பட்டித் தொகுதி மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். இந்த நிதி ஆண்டில் இல்லை யென்றாலும் வருகின்ற நிதி ஆண்டிலாவது அரசு தொழிற் பேட்டை அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் தொழிற்பேட்டை தொடங்குவது என்பது அரசு தனியாக முன்வந்து செய்யக்கூடிய காரியம் அல்ல. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தொழில் தொடங்குவதற்கு ஆர்வம் உடையவர்கள் 10, 20 பேர் முன் வந்து தொழில் தொடங்குகிறோம் என்று ஆர்வத்தினை அரசுக்குத் தெரிவிப்பார்களானால் சிட்கோவின் மூலமாக நிலம் ஆர்ஜிதம் செய்து அங்கே தொழில் கூடங்களைக் கட்டி தேவையான மின் இணைப்புகளைப் பெற்று குடிநீர் மற்றும் சாலை வசதிகளை ஏற்படுத்தி தொழில் முனைவோர்களுக்கு கூடங்களை சிட்கோ நிறுவனம் வழங்கும். எனவே எந்தப் பகுதிகளில் இதைப் போன்ற தொழில் கூடங்களை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிறார்களோ அந்த அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தொழில் தொடங்குவதற்கு ஆர்வம் உள்ளவர்களை அழைத்துப் பேசி குறைந்த பட்சம் ஒரு இடத்திற்கு 20 பேராவது விண்ணப்பம் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தருவார்களானால் சிட்கோ மூலமாக அந்த அந்தப் பகுதியில் தொழில் பேட்டை அமைப்பதற்கு அரசு முன்வரும் என்பதை அறிவிக்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியைத் தொழில் ரீதியாக மிகவும் பிற்பட்ட பகுதியாக நமது தமிழக அரசு அறிவித்து இருப்பதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொண்டு ஆனால் அறிவிக்கப்பட்டுள்ளதே தவிர எந்தவிதமான தொழிலும் எங்களது உசிலம்பட்டித் தொகுதியில் இல்லை என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்து தொழிற்பேட்டை அமைக்க உதவுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின் தங்கிய பகுதி என்று அறிவிப்பதற்குக் காரணமே அரசு அங்கே தொழிற்சாலைகளை அமைக்கும் என்ற நோக்கத்தோடு அல்ல. அங்கே தொழில் தொடங்குவதற்கு ஆர்வம் உள்ள தொழில் முனைவோர்கள் இதைப்போன்ற தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவார்களானால் மாநில, மத்திய அரசினுடைய மானியத்தைப் பெறுவதற்கும் மற்றும் சில சலுகைகளை

முன்னுரிமைகளைப் பெறுவதற்கும் இதுபோன்ற பகுதிகள் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே தனியார் தொழில் அதிபர்கள், அல்லது தொழில் முனைவோர்கள்தான் இந்த சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு தொழில் தொடங்குவதற்கு முன்வர வேண்டும்.

பட்டுக்கோட்டைப் பகுதியில் தொழிற்பேட்டை.

* 2337. திரு. கா. அண்ணாதுரை :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் தொழிற்பேட்டை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டைப் பகுதியில் தொழிற்பேட்டை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை சம்பந்தப்பட்டது. மேலும் அப்படிப்பட்ட செயற்குறிப்பு தற்போது இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் கடந்த கால கழக ஆட்சியில் அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த மரியாதைக்குரிய திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் எழுப்பிய இதுபோன்ற வினாவுக்கு அன்றைய அமைச்சர் அவர்கள் தற்போது அரசின் பரிசீலனையில் இப்படிப்பட்ட திட்டம் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலை என்ன ஆனது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகள் பற்றிய செயற்குறிப்பு எதுவும் இப்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டிய பட்டுக்கோட்டைப் பகுதியைச் சமீபத்தில் அரசு